பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**22 05 2026** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. எபோலா வைரஸ் பாதிப்பால், இம்மாதம் 28ஆம் தேதி புதுதில்லியில் நடைபெற இருந்த இந்தியா-ஆப்பிரிக்கா அமைப்பின் உச்சிமாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2. இந்தியா - சைப்ரஸ் இடையே வர்த்தகம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இன்று ஒப்பந்தம் கையெழுத்தாகிறது.

3. ஜம்மு-கஷ்மீர் விவகாரத்தை ஐ.நா.வில் எழுப்பிய பாகிஸ்தான் தூதருக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

4. உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட வட மாநிலங்களில் அடுத்த சில தினங்களுக்கு வெப்ப அலை நீடிக்கும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஹைதராபாத் அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

எபோலா வைரஸ் தொற்று பாதிப்பால், இம்மாதம் 28ஆம் தேதி புதுதில்லியில் நடைபெற இருந்த இந்தியா-ஆப்பிரிக்கா அமைப்பின் உச்சிமாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காங்கோ, உகாண்டா நாடுகளில் வேகமாக பரவி வரும் இந்த தொற்று பாதிப்பால் சுமார் 650க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டள்ளதாகவும், 144 பேர் உயிரிழந்திருப்பதாகவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த தொற்று பாதிப்பு காரணமாக பொது சுகாதார அவசர நிலை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

இந்த தொற்றைக் கட்டுப்படுத்த தடுப்பூசி உற்பத்தி செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அந்த நிறுவனம் கூறியுள்ளது.

இதனிடையே எபோலா தொற்று பாதிப்பை கருத்தில் கொண்டு ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து வருவோருக்கு பயண அறிவுறுத்தல்களை இந்தியா வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் இந்த வகை தொற்று இதுவரை உறுதி செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ஜம்மு-கஷ்மீர் விவகாரத்தை பாகிஸ்தான் தூதர் எழுப்பியதற்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் கூட்டம் சீனா தலைமையில் நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய ஐ.நா-வுக்கான இந்திய நிரந்தரப் பிரதிநிதி திரு. பர்வதனேனி ஹரீஷ், எல்லை தாண்டிய தீவிரவாத தாக்குதலில் பாகிஸ்தான் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக கூறினார்.

ஆஃப்கனிஸ்தான் நாட்டிற்குள் பாகிஸ்தான் அத்துமீறி நடத்திய தாக்குதலில் கடந்த ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையிலான காலத்தில் 750 கொல்லப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

மசூதியில் தொழுகை நடத்திவிட்டு வருவோரை குறிவைத்தும், பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி வருவது கோழைத்தனமானது என்று அவர் குறிப்பிட்டார்.

உலகம முழுவதும் வாழும் மக்களுக்கு பயங்கரவாதம் மிகப்பெரிய அச்சுறுத்தலாக திகழ்வதாகவும், எந்த வடிவில் பயங்கரவாதம் இருந்தாலும் அதை ஏற்க முடியாது என்றும் திரு. பர்வதனேனி ஹரீஷ் தெரிவித்தார்.

<<<<>>>>

புதுதில்லியில் வரும் ஜூன் ஒன்றாம் தேதி நடைபெற இருந்த முதலாவது சர்வதேச புலிகள் பாதுகாப்பு குறித்த உச்சிமாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தியா-ஆப்பிரிக்கா அமைப்பின் உச்சிமாநாட்டின் தொடர்ச்சியாக புலிகள் மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புலிகள் மாநாட்டை பல்வேறு ஆப்பிரிக்க நாடுகள் இணைந்து நடத்த இருந்தன.

புலிகள் பாதுகாப்பு, சூழலியல் ஸ்திரத்தன்மை, உயிரி பன்முக பாதுகாப்பு ஆகியவற்றில் உலகளாவிய முயற்சிகளை மேற்கொள்ளும் வகையில் இந்த மாநாடு நடத்தப்பட இருந்தது.

இந்நிலையில் இது தொடர்பாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஆப்பிரிக்க யூனியன் மற்றும் ஆணையத்தின் தலைவர்களுடன் நடத்திய ஆலோசனையின்போது எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் இந்தியா - ஆப்பிரிக்கா அமைப்பின் உச்சிமாநாட்டை பின்னர் நடத்துவது என முடிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் புலிகள் குறித்த உச்சிமாநாடு நடைபெறும் தேதியும் பின்னர் அறிவிக்கப்படும் என்று அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

வர்த்தகம், முதலீடு, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா - சைப்ரஸ் இடையே இன்று ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன.

இந்தியா வந்துள்ள சைப்ரஸ் அதிபர் **Nikos Christodoulides**-ஐ பிரதமர் திரு. நரேந்திர மோடி, புதுதில்லியில் இன்று சந்தித்து இருதரப்பு பேச்சுகள் நடத்த உள்ளார்.

மும்பை பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று புதுதில்லி வந்தடைந்த சைப்ரஸ் அதிபரை விமான நிலையத்தில் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை இணையமைச்சர் திரு. **Ajay Tamta** வரவேற்றார்.

சைப்ரஸ் அதிபருடன் அந்நாட்டு அமைச்சர்கள் **Constantinos Kombos, Alexis Vafeades** மற்றும் உயரதிகாரிகள் அடங்கிய பிரதிநிதிகள் குழுவும் இந்தியா வந்துள்ளது.

சைப்ரஸ் அதிபராக பதவியேற்ற பின்னர் **Nikos Christodoulides** முதல் முறையாக இந்தியா வந்துள்ளார்.

<<<<>>>>

மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இரண்டு நாள் பயணமாக இன்று ராஜஸ்தான் செல்கிறார்.

இன்று காலை ஜோத்பூர் செல்லும் அவர் அங்கு பல்வேறு ரயில் சேவைகளை தொடங்கி வைக்கிறார்.

ஜோத்பூர் - தில்லி இடையே 20 பெட்டிகள் கொண்ட வந்தேபாரத் விரைவு ரயிலை அமைச்சர் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

ஏற்கனவே இந்த ரயில் 8 பெட்டிகளுடன் இயக்கப்பட்டது.

சபர்மதி - ஜோத்பூர் இடையேயான அதிவிரைவு ரயில் ஜெய்சால்மர் வரை நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் சேவையையும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தொடங்கி வைக்கிறார்.

மேலும் ஜெய்சால்மரில் கட்டப்பட்டுள்ள புதிய ரயில் பெட்டி வளாகத்தையும் அவர் காணொலி மூலம் தொடங்கி வைக்கிறார்.

இம்மாநிலத்தில் நாளையும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் திரு. அஷ்வினி வைஷ்ணவ், பல்வேறு அரசுத் துறைகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு ஜெய்ப்பூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் பணி ஆணைகளை வழங்குகிறார்.

<<<<>>>>

மத்திய அமைச்சரவை பாதுகாப்பு செயலாளராக மணிப்பூர் காவல்துறை தலைமை இயக்குநர் திரு. ராஜீவ் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருடைய நியமனத்திற்கு மத்திய பணியாளர் நல அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களின் இல்லங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் சிறப்பு பாதுகாப்புக் குழுவிற்கு திரு. ராஜீவ் சிங் தலைமை வகிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

புல்வாமா பயங்கரவாத தாக்குதலில் மூளையாக செயல்பட்ட ஹம்ஸா புர்ஹான், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு-கஷ்மீரில் நேற்று அடையாளம் தெரியாத நபரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கடந்த 2019ஆம் ஆண்டு புல்வாமாவில் நடத்தப்பட்ட தாக்குதலில் 40 மத்திய ரிசர்வ் காவல் படையினர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், அல்-பதர் தீவிரவாத அமைப்பின் கமாண்டரான புர்ஹான் என்ற அஞ்சுமன் குல்ஸார் தார் என்பவரை கடந்த 2022ஆம் ஆண்டு முக்கிய குற்றவாளியாக இந்தியா அறிவித்தது.

தேடப்பட்டு வந்த புர்ஹான், முசாஃபராபாதின் கோஜ்ரா என்ற இடத்தில் தனியார் கல்லூரியில் பணியாற்றி வந்ததாகவும், நேற்று கல்லூரியை விட்டு வெளியே வந்தபோது அடையாளம் தெரியாத நபர்கள் சரமாரியாக சுட்டுக் கொன்றதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

<<<<>>>>

**2026-27**ஆம் ஆண்டு சுற்றுலா சீசனை முன்னிட்டு மேம்படுத்தப்பட்ட அதிநவீன சொகுசு ரயில் சேவையை இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலாக் கழகமான ஐ.ஆர்.சி.டி.சி. அறிவித்துள்ளது.

இந்த ரயிலில் பயணம் செய்வோருக்கு பல்வேறு சிறப்பு வசதிகள் செய்யப்பட்டிருக்கும் என்று **IRCTC** அறிக்கை தெரிவிக்கிறது.

கலாச்சார பாரம்பரியம், தென்னிந்தியாவின் பல்வேறு முக்கிய இடங்கள் குறித்த காட்சிகள், நவீன வசதிகளுடன் கூடிய இருக்கைகள் உள்ளிட்டவை இந்த ரயிலில் இடம்பெற்றிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Wi-Fi** உடன் கூடிய பொழுதுபோக்கு அம்சங்களும், **40** கேபின்களுடன் **80** பேர் பயணம் செய்யக்கூடிய வகையில் இந்த சொகுசு ரயில் இயக்கப்படும் என **IRCTC** தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட வட மாநிலங்களில் வெப்பத்தின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

ஐந்தாவது நாளாக நேற்று, உத்தரப்பிரதேசத்தின் **Banda** மாவட்டத்தில் அதிகபட்சமாக **47** புள்ளி **6** டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவானது.

**Bundelkhand** மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் தொடர்ந்து **45** டிகிரி செல்சியசை தாண்டி வெப்பநிலை பதிவாகி வருவதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

**Banda, Prayagraj** உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் இயல்பை விட **5** டிகிரி செல்சியஸ் அதிக வெப்பநிலை தொடர்ந்து பதிவாகும் என்பதால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வாரணாசியில் இந்த ஆண்டு மிக அதிக அளவாக **45** புள்ளி **6** டிகிரி செல்சியசும், லக்னோவில் **43** புள்ளி **6** டிகிரி செல்சியசும் வெப்பநிலை பதிவானதால் மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர்.

மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளிலும், ஹரியானா, பஞ்சாப், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும், தலைநகர் தில்லியிலும் அடுத்த சில தினங்களுக்கு வெப்பத்தின் தாக்கம் தொடரும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஹைதராபாத் அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30க்கு ஹைதராபாதில் தொடங்குகிறது.

அகமதாபாதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத் அணி 89 ரன் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

முதலில் விளையாடிய குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 229 ரன் குவித்தது.

தொடக்க ஆட்டக்கார ர்கள் சாய் சுதர்ஷன் 84 ரன்னும், சுப்மன் கில் 64 ரன்னும் சேர்த்தனர்.

ஜோஸ் பட்லர் 57 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

230 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய சென்னை அணி, 13 புள்ளி 4 ஓவரில் 140 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**<<<<The End>>>>**